# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,482 — 1965 අගෝස්තු 14 වැනි සෙනසුරාදා — 1965.8.14

14,482 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]

## அரசாங்க அறிவித்தல்கள்

எல்டி-பீ 36/57

### 1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்

**33 ம் பிரிவின் கீழான கட்டளை**

*கைத்தொழில் கடற்றெழில் அமைச்சர் டொன் பிலிப் ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான் எனக்கு 1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 33 ம் பிரிவினுல் அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் இதன் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காணிகளை மேற்சொலலப்பட்ட சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழானதும், 1964 ஒக்டோபர் 1 ம் தேதிய 14,186 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டதுமான இணைத்தற்கட்டளைமூலம் நிறுவப்பட்டதுமான இலங்கைக் கடற்றெழில் கூட்டுத்தாபனத்தின் பிரயோசனத்திற்கு எடுக்கவுள்ள உத்தேசத்தினை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கிறேன்.*

டி. பி. ஆர். குணவர்த்தன,
கைத்தொழில்; கடற்றெழில் அமைச்சர்.

கொழும்பு, ஆகஸ்ட் 12, 1965.

**அட்டவணை**

*தென்மாகாணம் காலி மாவட்டம் நாலு கிறவற்—காலி நகரசபைக்கான பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மாகாலே கிராம சேவையாளர் பிரிவில் மாகாலே என்னும் கிராமத்தில் காலி மாத்தறை வீதியில் மதிப்பீடு இலக்கங்கள் :* 216, 218, 220, 222, 230, 234, 236, 238, 240, 244/1, 248, 250, 252, 254, 256, 258, 260, 264, 266, 268/1, 268/2, 270/1, 274, 276, 278, 282/2, 282, 284, 286 *இடப்பட்ட தொடர்பாகவுள்ள இருபத்துநாலு துண்டுக் காணிகளையும், கட்டிடங்களையும் கொண்டதும் (அக்காணிகளின் ஊடாகச் செல்லும் வீதிகளும், வீதிகளுக் கென ஒதுக்கி வைக்கப்பட்ட காணிகளும் உட்பட) ஏறக்குறைய ஆறு ஏக்கர் ஒரு றூட் ஒன்பது பேர்ச்சுகள் விஸ்தீரணம் கொண்டதும் பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதுமான இடப்பரப்பு அடங்கலும் :*

*வடக்கு : மாத்தறை வீதி ;*
*கிழக்கு : பள்ளி வாசலுக்குரிய ஆதனம் ;*
*தெற்கு : கடற்கரை ;*
*மேற்கு : மதிப்பீட்டிலக்கம் 214 கொண்ட வளவும் சியோகிஸ்கி வத்தையும்.*

8-601

---

## விலைக்கட்டளைகள்

**விலைக் கட்டளை இல. எம்ரீ/5/65** — **உப உணவுப் பொருட்கள்—மைசூர்ப் பருப்பு**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

(173 ம் *அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்* 3 (2) *ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும்* 4 *ம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மாத்தறை மாவட்டத்து உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) ஆகிய லியனகே தொன் தோமஸ் ஜயசிங்ஹ ஆகிய நான் இக்கட்டளையால் —*

(i) 1963 *ம் ஆண்டு ஒக்டோபர் மாதம்* 15 *ந் தேதி வெளியான* 13,792 *ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரமான* 1963 *ம் ஆண்டு ஒக்டோபர் மாதம்* 10 *ந் தேதியைக் கொண்ட எம்ரீ/12/63 ம் இலக்க விலைக் கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கி விடுகிறேன்.*

(ii) (173 *ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட இதற்குள்ள அட்டவணையின்* 2–7 *ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே அவ்வட்டவணையின்* 2–7 *ம் பத்தியில் விஸ்தரிக்கப்பட்ட இடப்பரப்புகளில் அல்லது நிர்வாக மாவட்டங்களில்* 1 *ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள்களின் அதற்குக் கூடிய விலைக்கு விற்றலாகா மொத்த அந்தரின் உடனேயே நடைமுறை யாகும் மொத்த விலையாக விதிக்கிறேன்.*

(iii) (173 *ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கெனக் குறிப்பிட்ட விலையுடன்* 8 *ம் பத்தியிற் குறிக்கப்பட்ட தொகையைக் கூட்டிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த* 1 *ம் பத்தியிற் சொல்லப்பட்ட பொருள்களின் அட்டவணையின்* 2–7 *ம் பத்தியிற் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பிலுள்ள அல்லது மாவட்ட எல்லைக்குள் அதற்குக் கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன்.*

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக —

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்பதற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைக்கு விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளையும் ஒரு அங்குலத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளும் ஆகக் கூடிய விலையும் வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(viii) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(ix) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அவ்வட்டவணையின் 2–8 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருள்களைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையுமடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் தேதி முற்பகல் 9.30 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எல். டீ. ரீ. ஜயசிங்ஹ,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தறை மாவட்டம்.

**அட்டவணை**

| பத்தி 1 | பத்தி 2<br>பரப்பு | பத்தி 3<br>பரப்பு | பத்தி 4<br>பரப்பு | பத்தி 5<br>பரப்பு | பத்தி 6<br>பரப்பு | பத்தி 7<br>பரப்பு | பத்தி 8<br>பரப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| பொருளின் விபரம் | மாத்தறை ந.ச.<br>டொன்ரு ப.ச.<br>கெகனந்துறை கி.ச.<br>அபறெக்க–பபறெந்த கி.ச.<br>மாலிம்பட கி.ச.<br>நாயிமன–மாகாவிற்ற கி.ச.<br>திககொடை கி.ச.<br>மடிஹ–கொடகம கி.ச.<br>கந்தறை கி.ச.<br>கோட்டகொட கி.ச. | வெலிகாமம் ந.ச.<br>வெலிகாமம் கி.ச.<br>மிறிஸ்ஸ கி.ச. | அகுறஸ்ஸ ப.ச.<br>மாறம்ப கி. ச.<br>கனன்கே கி.ச.<br>கொடபிடிய கி.ச. | ஹக்மன–வளகட கி.ச.<br>கந்தபிற்ற–வளகட கி.ச.<br>கம்புறுபிற்றிய கி.ச.<br>கிரிந்த–புஹுல்வெல்ல கி.ச.<br>டிக்வெல்ல கி.ச. | மொறவக்க கி.ச. | பொலபனுதற கி.ச.<br>தெனியாய கி.ச. | கொழும்பு மாநகர எல்லைக் குட்பட்ட சில்லறை வியாபாரிகளின் இருத்தல் ஒன்றுக்குக் கூட்ட வேண்டிய விலை |
| | கொழும்பு மாநகர சபையிலும் பார்க்க மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | | | | | | |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மைசூர்ப் பருப்பு(ரகம் I) இறக்குமதி செய்யப்பட்டது | 3 10 .. | 3 0 .. | 3 0 .. | 3 20 .. | 3 30 .. | 3 40 .. | 0 3 |
| மைசூர்ப் பருப்பு(ரகம் II) உள்ளூரில் குத்தப்பட்டது | 3 10 .. | 3 0 .. | 3 0 .. | 3 20 .. | 3 30 .. | 3 40 .. | 0 3 |

**குறிப்பு.**—இவ்விலைகள் பொருள்கள் விற்கப்பட வேண்டிய குறிப்பிட்ட விலைகள் அல்ல ; இவை அவற்றிலும் பார்க்கக் கூடிய விலைக்கு விற்றலாகா **உச்ச** விலைகளாகும்.

8–575

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.